1970 செப்டம்பர் 5]

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, இராமேசுவரம் கோவில் இரண்டாவதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது என்றால் முதல் கோவில் எது? இந்தக் கோவிலுக்கு யுனெஸ்கோவில் இருந்து எவ்வளவு பணம் கேட்கப்பட்டிருக்கிறது, அவர்கள் எவ்வளவு அனுமதி வழங்கியிருக்கிறார்கள்? அந்த வேலை எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவில் முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. அதற்கான வேலை நடைபெற்று வருகிறது. அதற்கு அடுத்ததுதான் இந்த இராமேசுவரம் கோவில். 12 ஆயிரம் டாலர் ஆண்டு ஒன்றுக்குக் கொடுக்கிறார்கள் ரொக்கமாகக் கொடுப்பதில்லை.

'Materials which are not readily available in India are supplied by UNESCO'

என்பதாக இது சம்பந்தமாக யோசனை சொல்லக்கூடியது, இன்னும் புத்தகங்கள் அச்சிட்டு கொடுப்பது ஆகிய வகையில் உதவி செய்கிறது. மூன்றாவது கோவில் காஞ்சீபுரம் வரதராஜர், நான்காவதாக சிதம்பரம் கோவில் இப்படி 10 ஆண்டுகளுக்கு பத்து கோவில்களை எடுத்து உதவி செய்ய யோசனை கூறப்பட்டு ஏற்கப் பட்டிருக்கிறது.

மதுரையில் வானொலி நிலையம்

*231 வினா—திரு. பி. எஸ். மணியன்:

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் வானொலி நிலையம் ஏற்படுத்தும் முயற்சி அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆம். மதுரையில் வானொலி நிலையம் அமைக்கக் கோரி மத்திய அரசுடன் கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது.

திரு. பி. எஸ். மணியம்: மதுரையை மையமாக வைத்து மாவட்ட மக்கள் பல கோரிக்கைகளை அரசிடம் வைக்கிறார்கள். அரசும் நிறை வேற்றி வருகிறது. மதுரை–இராமநாதபுரம் வர்த்தக சபை வர்த்த கத்தைப் பெருக்க மதுரையில் ஒரு வானொலி நிலையம் ஏற்படுத்தித் தர வேண்டும் என்கிறார்கள். அதை கவனித்து அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் இதில் எவ்வளவு அக்கறையோடு இந்தத் பிரச்னையை அணுகுகிறாரோ, அதைப்போலவே இந்த அரசும் இரண்டு மூன்று தடவைகளுக்கு மேல் மத்திய சர்க்காருக்குக் கடிதம் மூலமாக வேண்டுகோள் விடுத் திருக்கிறது. வானொலி நிலையம் ஏற்படுத்துவதில் இன்னமும் பின் தங்கிய நிலையில் உள்ள பகுதிகளின் தேவை கவனிக்கப்பட்ட பிறகு இதுவும் கவனிக்கப்படும் என்று மத்திய அரசிடம் இருந்து கடிதம் வந்திருக்கிறது. என்றாலும் அண்மையில் மீண்டும் இதைப்பற்றிக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது.

[1970 செப்டம்பர் 5

திரு. என். எஸ்: வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரசபையும்கூட இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி ஒரு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியது. இது குறித்து மத்திய அரசாங்கத்திற்கு நம்முடைய அரசாங்கம் எப்போது கடைசியாக கடிதம் எழுதியுள்ளது? மேலும் இந்த விஷயத்தில் அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, கடைசியாக எழுதிய கடிதம் என்று குறிப்பிட விரும்பவில்லை. அண்மையில் 31–7–70-ல் கடிதம் எழுதப்பட்டது.

Production of Documentary films

* 232 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Government's Information Department is producing documentary films besides news reels; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) தயாரிக்கப்படுகின்றன.

(இ) திரைப்பட கல்லூரி மூலமாக வரலாற்றுப் படங்கள் தயாரிக்கப்படுகின்றன. 1967-ம் ஆண்டில் அம்மை நோய் பற்றிய படமும் 1969-ம் ஆண்டில் குழந்தை நலம் பற்றிய படமும் வரலாற்றுப் படங்களாக (Documentary films)முறையே ரூ. 15,000, ரூ. 14,700 செலவில் எடுக்கப்பட்டன. செய்திப் படங்களில் பகுதி களாக கீழ்க்கண்ட வரலாற்றுப் படங்களும் 1968–69-ம் ஆண்டில் தயாரிக்கப்பட்டன.

1. தேடிவந்த செல்வம் (Raffle)
2. காந்தி நூற்றாண்டு விழா.
3. ஈடான உணவு (Wheat)
4. வளரும் செல்வங்கள் (Midday Meals Schemes)
5. அண்ணா இருக்கின்றார்.

மேற்கண்ட படங்களைத் தவிர கீழ்க்கண்ட படங்கள் தயாரிப்பு நிலை யில் உள்ளன.

1. குடும்ப நலம்.
2. பொருட்காட்சி.
3. கடல் மீன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க மதுரை, தஞ்சை, திருச்சி போன்ற நகரங் களில் உள்ள கோயில்களைப் படம் எடுத்து, அதை வெளிநாடுகளுக்கு, வட மாநிலங்களுக்கு அனுப்பினால், அங்கிருந்து பயணிகள் அதிகம் பேர் வரக்கூடிய வாய்ப்பு இருப்பதால், தமிழக அரசுக்கு லாபம் அதிகம் வருகின்ற காரணத்தினால், இதுபற்றி அரசு யோசிக்க முயற் சிக்குமா?